செ.வெ.எண்.17 நாள்:19.05.2020

# நீலகிரி மாவட்டத்தில் 2020-2021 ஆம் நிதி ஆண்டில் 4315 ஹெக்டர் பரப்பளவில் ரூ.1295.00 இலட்சம் மானியத்தில் நுண்ணீர் பாசன திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

**நீலகிரி மாவட்டத்தில் 2020-2021 ஆம் நிதி ஆண்டில் 4315 ஹெக்டர் பரப்பளவில் ரூ.1295.00 இலட்சம் மானியத்தில் நுண்ணீர் பாசன திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,**

நீலகிரி மாவட்டத்தின் பொருளாதாரம் பெரும்பாலும் தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியை சார்ந்தே உள்ளது. இம்மாவட்டத்தில் தேயிலை மற்றும் காய்கறி பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

நீர் ஆதாரம் மற்றும் மழைப்பொழிவு நாளுக்கு நாள் குறைந்து வருவதால் இருக்கும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக பரப்பில் பயிர் சாகுபடி செய்யும் நோக்கில் இத்திட்டத்தின் மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கப்படவுள்ளது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு குறைந்த பட்சம் 0.40 ஹெக்டர் முதல் அதிகபட்சமாக 2.00 ஹெக்டர் வரை ஒரு விவசாயி இத்திட்டத்தில் பயன் பெறலாம். இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியத்தில் தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கப்படவுலுள்ளது. இயற்கை நீர்வளம் குறைந்து கொண்டே வரும் இந்த சூழலில் இத்திட்டத்தின் மூலம் 40 முதல் 60 சதவீதம் வரை நீர் சேமிக்கப்படுகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் 6398 ஹெக்டர் பரப்பிற்கு 100 சதவீதம் மானியத்தில் தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் நுண்ணீர் பாசனத்திட்டத்தை செயல்படுத்தும் விவசாயிகளை ஊக்கவிக்கும் வகையில் பிரதான் மந்திரியின் நுண்ணீர் பாசன திட்டத்தின கீழ் துணை நீர் மேலாண்மை நடவடிக்கைகள் (SWMA) 2019-20 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நுண்ணீர் பாசன திட்டத்தின் பதிவு செய்யும் விவசாயிகளுக்கு விவசாய நிலங்களை பாசனம் செய்ய

ஏதுவாக டீசல் மோட்டார் / மின் மோட்டார் 700 எண்கள் இணைப்பு குழாய் 355 எண்கள், ஆழ்துளை கிணறு 235 எண்கள் மற்றும் தரைமட்ட நீர் சேமிப்பு கூட்டமைப்பு 15 எண்கள் ஆகியவற்றிற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டள்ளது. எனவே நுண்ணீர் பாசனத்தில் பதிவு செய்யும் விவசாயிகள் துணை நீர் மேலாண்மை சிறப்பு திட்டத்திலும் பதிவு செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் தங்கள் பயிரிடும் தோட்டக்கலை பயிர்களை அடங்கலில் பதிவு செய்வதுடன் குடும் அட்டை நகல், அடங்கள். கணினி சிட்டா, நிலவரைப்படம் சிறு/குறு விவசாயிகளாக இருப்பின் அதற்கான வட்டாட்சியரிடம் இருந்து பெறப்பட்ட சான்று ஆகிய ஆவணங்களுடன் அருகில் இருக்கும் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் காய்கறி பயிர்கள், தேயிலை மற்றும் காபி போன்ற பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளும் பயன்பெறலாம்.எனவே விவசாயிகள் இந்த பொன்னான வாய்ப்பினை பயன்படுத்தி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நீலகிரி மாவட்டம்.